

# சாளரம்

# Chaalaram

தை-பங்குனி Jan- Mar 2014

ஒளி-07 கீற்று- 01

சாளரத்தின் ஏழாவது ஒளியின் முதலாவது கீற்றில் இவ்வாண்டு உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி. அனைவருக்கும் எமது புதுவருடப், பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

பிறந்துள்ள புதிய ஆண்டு தமிழர்களாகிய எமக்கெல்லாம் புத்தொளி தந்து அமைதியையும், சாந்தியையும் தர ஆண்டவனைப் பிரார்த்திப்போம். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தி பரீட்சைகளை முழுமனத்துடன் எழுதி நல்ல பெறுபேறுகளைப் பெற வேண்டுகின்றோம்.

எமது தமிழ்ப் பாடசாலையில் இந்த ஆண்டும் கடந்த ஆண்டைப் போன்று பிள்ளைகள் அனைவருக்கும் தமிழ்த் திறன் போட்டி 2014 மாசி மாதத்தில் (February) நடைபெற உள்ளது. அதற்கான போட்டி விதிமுறைகள், விண்ணப்பப் படிவங்கள் மற்றும் பேச்சுப் போட்டிக்கான உரைகள் அனைத்தும் பிள்ளைகள் அனைவருக்கும் வழங்கப்படும். பெற்றோர்களே! தங்கள் பிள்ளைகளை இப்போட்டிகளில் நிச்சயமாகப் பங்குபற்றி பரிசில்களை பெறவைப்

பது உங்கள் கைகளில்தான் உள்ளது. பாடசாலை நிருவாகம் அனைத்து மாணவர்களும் இத் தமிழ்த் திறன் போட்டியில் பங்குபெற வேண்டும் என்பதையே விரும்புகின்றது. எதிர்வரும் பங்குனி(March) மாதத்தில் பரிசளிப்பு வைபவம் நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றோம். இதற்கான திகதி மற்றும் மண்டப விபரங்கள் அனைத்தும் உங்கள் அனைவருக்கும் வழங்கப்படும்.

பாடசாலையில் ஒவ்வொரு மாதத்தின் இறுதி நாள் வகுப்புக்களில் ஆசிரியர்களால் பரீட்சை நடாத்தப்படுகின்றது. எனவே பெற்றோர்கள் மாணவர்களை ஊக்கப்படுத்தி அவர்களை தமிழைப் படிக்கவைக்க வேண்டுகின்றோம். அத்துடன் பிள்ளைகளின் வாசிப்புத் திறனை அதிகரிக்க எம்மால் தொடங்கப்பட்ட (Library) வாசிகசாலைத் திட்டத்தில் மாணவர்கள் இணைந்துள்ளனர். இணையாதவர்கள் இணைவதோடு மட்டுமல்லாது மாணவர்கள் கொண்டுவரும் புத்தகங்களை அவர்களோடு சேர்ந்து பெற்றோர்கள் ஊக்கப்படுத்தி வாசிக்க வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

## இந்தத் தவணைக்கான பாடசாலை நாட்கள்.

10.01.2013 தவணைக்கான பாடசாலை ஆரம்ப நாள்

17.01.2013 வெள்ளிக்கிழமை

24.01.2013 வெள்ளிக்கிழமை

31.01.2013 வெள்ளிக்கிழமை மாதாந்தப் பரீட்சை

07.02.2013 வெள்ளிக்கிழமை தமிழ்த் திறன் போட்டி

14.02.2013 வெள்ளிக்கிழமை தமிழ்த் திறன் போட்டி

21.02.2013 பாடசாலை இடைத்தவணை விடுமுறை

28.03.2013 வெள்ளிக்கிழமை மாதாந்தப் பரீட்சை

07.03.2014 வெள்ளிக்கிழமை

09.03.2013 ஞாயிறு பரிசளிப்பு விழா

14.03.2013 வெள்ளிக்கிழமை

21.03.2013 வெள்ளிக்கிழமை

28.03.2013 வெள்ளிக்கிழமை மாதாந்தப் பரீட்சை பாடசாலை விடுமுறை

04.04.2013 தவணைக்கான பாடசாலை இறுதி நாள்

இனிய தமிழ்ப்புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்கள்



**இலக்கியப் பகுதி**

# ஐயர்

இன்றைக்கு நடைபெறுகின்ற திருமணப் பிரம்மாண்டங்களைப் பார்க்கும்போது திருமணம் என்பதே தேவைதானா எனச் சில முற்போக்குச் சிந்தனையாளர்கள் கேள்விகளை முன்வைக்கின்றனர். திருமண ஒப்பந்தம் எனும் சீர்திருத்தத் திருமணங்களை விடச் சடங்குகளையே மையமிட்ட பல திருமணங்களைப் பார்க்கும் போது இக் கேள்வி சரிதானா என நமக்குத் தோன்றுகிறது.

திருமணம் எப்படி வந்தது?

:பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம் என்ப:

என்று விளக்கம் தருகிறார் தொல்காப்பியர். :கரணம் என்னும் திருமணம் தமிழர் மரபில் வரக் காரணம் பொய்யும் வழுவும் தோன்றியதே என்பது இதன் பொருள். மனமொத்த ஆணும், பெண்ணும் எந்தவிதச் சடங்குமின்றி நீயாகியர் என் கணவனை,யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே என்று இணைந்து வாழ்ந்த முறைமை முன்பு இருந்தது. ஆனால் காலப் போக்கில் பொய்யும், குற்றமும் அவர்கள் வாழ்வில் புகுந்து பிரிந்து வாழ நேர்ந்ததால் இதனை முறைமைப் படுத்த ஐயர் இத் திருமண முறையை ஏற்படுத்தினர்.

யார் இந்த ஐயர்?

இன்று திருமண மண்டபங்களில் வேத மந்திரங்களை ஒலித்து வேள்விகள் இயற்றி மணமக்களையும் சுற்றத்தினரையும் ஆற்றுப்படுத்துகின்ற :ஐயர்: எனும் இனத்தாரையா தொல்காப்பியர் குறித்தார்?

இன்று ஐயர் எனும் அந்தண மரபினரைக் குறிக்கும் ஒரு சொல் :இனத்தை: அடையாளப்படுத்தினாலும் தொல்காப்பியமும், சங்க இலக்கியமும் இச் சொல்லை வேறு பொருண்மைகளிலேயே கையாண்டிருக்கின்றன. பொய்யும்,வழுவும் தோன்றிய பின்னர் அறிவிலும், சான்றாண்மையிலும், வயதிலும் மூத்த பெருமக்கள் திருமணமுறையை ஏற்படுத்தினர் என்பதே தொல்காப்பியக் கருத்து. எனவே தொல்காப்பியர் கூறும் :ஐயர்: இனத்தைக் குறிக்கும் சொல் அல்ல.

சங்கத் தமிழ் அக இலக்கியங்களில் :ஐ: என்ற சொல் காதலனையும், புற இலக்கியங்களில் :ஐ: என்ற சொல் தலைவர்களையும் குறித்து வருகின்றது. சில இடங்களில் :ஐ: என்ற சொல் தலைவியின் தந்தையைக் குறிக்கிறது.

திருந்து கோல் எவ்வளை வேண்டி யான் அழ

அரும்பிணி உறநர்க்கு, வேட்டது கொடா அது

மருந்து ஆய்ந்து கொடுத்து அறவோன் போல

என் ஐ வாழிய பலவே!........

போக்கு இல் பொலந்தொடி செறீஇயோனே!

தலைவன் பிரிந்ததால் தலைவி தோளில் அணிந்திருந்த சங்கு வளையல் உடல் மெலிந்ததால் கழன்று வீழ்ந்தது. உஉஉவேறு வளையல் கேட்டுத் தலைவி அழுதாளாம்.ஆனால் தந்தையோ நோய் வந்தவர் விரும்பியது கொடுக்காமல் மருந்தை ஆராய்ந்து கொடுக்கும் மருத்துவன்போல எப்போதும் கழன்று வீழாத இறுக்கமான பொன்வளை யலை வாங்கிக் கொடுத்தானாம். இங்கே :ஐ: தந்தையைக் குறிக்கிறது.

:ஐயர்: :ஐ: என்ற சொற்கள் மூத்த ஆடவரைக் குறிப்ப தைப்போல பெண்களில் சிறந்தவளை :ஐயள்: என்று சங்ககால மக்கள் அழைத்ததை ஐங்குறுநூறு மூலம் அறியமுடிகிறது.

:குன்றக் குறவன் காதல் மடமகள்

வரையர மகளிர்ப் புரையும் சாயவள்

ஐயள்:

பதிற்றுப்பத்து இலக்கியம் முனிவரைக் குறிக்க ஐயர் என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறது.

:வேள்வியில் கடவுள் அருத்தினை கேள்வி

உயர்நிலை உலகத்து ஐயர் இன்புறுத்தினை:

(பதிற்றுப்பத்து-70)

செல்வக் கடுங்கோ வாழியாதன் வேள்விகள் மூலமாகக் கடவுளையும் உபசரிப்பின் மூலமாக முனிவர்களையும் இன்புறுத்திய செய்தியைக் கபிலர்தம் கூற்றால் அறியலாம்.அந்தணர் என்றும் ஐயர் என்றம் இன்று வழங்கும் சொல்லாட்சிகளைப் பரிபாடல் இலக்கியம் இனத்தைக் குறிக்கப் பயன்படுத்தியுள்ளது.

:ஈப்பாய் அடுநறாக் கொண்டது இவ்யாறு என

பார்ப்பார் ஒழிந்தார் படிவு

மைந்தல் மகளிர் மணவரைத் தூவிற்று என்று

அந்தணர் தோயலர் ஆறு

வையை தேம் மேவ வழுவழுப்பு உற்றென

ஐயர் வாய் பூசுறார் ஆறு:

(பரிபாடல்-தி-2-57)

வைகையில் புதுவெள்ளம் வந்தவுடன் ஆடவரும், மகளிரும் அதில் நீராடி மகிழ்ந்தனர். அவ்வாறு நீராடும்போது ஆற்றில் கள்ளை ஊற்றி வழிபட்டனர். ஈமொய்க்கும் கள் ஊற்றப்பட்டதால் பார்ப்பனர் அவ் வாற்றில் குளிக்கவில்லையாம். குளித்த மக்கள் ஆற்றில் நறுமணப் பொருள்களைத் தூவியதால் அந்தணர் அங்கு குளிக்கவில்லை.தேன் ஊற்றப்பட்டதால் அது வழுவழுப்பாக இருந்ததால் ஐயர்கள் அந்த ஆற்றில் வாய்கூடக் கழுவவில்லையாம். இப்படி இனச் சொற்களால் :ஐயர்: பரிபாடலில் பேசப்படுகிறது. மூத்தோர்,சான்றோர்,செந்தண்மை பூண்டோர் ஐயர் எனச் சங்க இலக்கியங்கள் கூறியதால் தமிழ் வளர்த்த வெளிநாட்டுப் பாதிரிமார்கள் தங்கள் பெயருக்குப் பின் :ஐ

'ஐயர்: என்ற பெருமிதமாக பின்னொட்டைச் சேர்த்துக் கொண்டனர்.

# ஞாயிறு போற்றுவோம்

தை மாதம் பிறந்தாலே அனைவரது மனங்களிலும் பொங்கல் என்ற எண்ணம் தோன்றுவதைத் தவிர்க்கமுடியாது. தை மாதத்துக்கென்று தனிச் சிறப்புகள் பல உண்டு.

தை பிறந்து விட்டால் வழியும் தெரிந்துவிடும். ஐப்பசி, கார்த்திகை, மார்கழி என்று பெருமழையும் கடும் பனியுமாக ஆதவனை மறைத்திருந்த இயற்கை தை மாதத்தில் அவன் சுடரொளி பூமியில் பட்டு புத்தணர்வு பூக்க உதவுகின்றது. பகலவனைக்க கண்ட பயிர்கள் எல்லாம் ஆரோக்கியம் மேம்பட்டு, செழித்து வளர்ந்து அறுவடை செய்யப்படத் தயாராக இருக் கின்றன. தட்சிணாயணம் என்கின்ற தன்னுடைய தென்திசைப் பயணத்தை முடித்துக் கொள்ளும் சூரியன், அங்கிருந்து வடக்குத் திசை நோக்கி உத்தராயணமாகப் பயணிக்கத் தொடங்கும் நாள்தான் தமிழர்களுடைய தை மாதம் முதல் நாள் ஆகும்.

அதாவது ஆடிமாதத்திலிருந்து தெற்கு திசை நோக்கிப் பயணம் செய்த ஆதவன், தை மாதத்தில் இருந்து வடக்கு திசை நோக்கித் தன் பயணத்தை மேற்கொள்கிறான். உதிப்பது கிழக்கில் மறைவது மேற்கில் என்றாலும் பகலவன் ஒரு நாளைக்கு ஒரு பாகை வீதம் தெற்கு அல்லது வடக்கு நோக்கி நகர்கிறான். அதாவது ஆறு மாதம் தெற்கு நோக்கியும், ஆறு மாதம் வடக்கு நோக்கியும் பயணிப்பதை உத்தராயணம் என்பார்கள்.

அதாவது வடக்கு திசை வழி, சோதிட சாத்திரப்படி சூரியன் மகர ராசிக்குள் பிரவேசிப்பதா கவும் அதனால் அப்படிப் பிரவேசிக்கும் காலத் தொடக்கம் :மகர ரவி: என்றும் சொல்லப்படுகிறது. இவ்வாறு சூரியப் பயணம் திசை மாறுவதை :சங்கிராந்தி: என்றும் சொல்லப்படுகின்றது. உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உணவுப் பொருட்களை குறிப்பாக அரிசியை ஆதவன் தன் பொற்கரணங்களால் செறிவூட்டி மக்களுக்கு வழங்கும் இந்த அருட் கொடைக்கு நன்றி செலுத்தவே பொங்கல் பண்டிகையாகக் கொண்டாடப்படுகின்றது. நன்றி தெரிவிப்பதை விழாவாக, கொண்டாட்டமாக அனைவருடனும் கூடிக்களிக்கும் நிகழ்ச்சியாக மேற்கொள்ளுவது தமிழர் பண்பாடு. அந்த நாகரீகத்தின் பிரதி பலிப்புத்தான் பொங்கல் திருநாளாகும்.

கிழக்கில் தோன்றி மேற்கில் மறையும் கதிரவன் தன்னுடைய இந்தப் பயணத்தை தெற்கு, வடக்குத் திசைகளில் சாய்ந்தபடியே மேற்கொள்கிறான். தை மாதத்தில் அவன் வடக்கு சாய்ந்து மேற்கொள்ளும் பயணம் தான் உத்தராயணம்.

# யோகாசனத்தில் தியானம்

கடவுளை அடைய உடலை மட்டும் தூய்மை யாக வைத்தால் போதாதுஇ உள்ளத்தை தூய்மை யாக வைப்பது அவசியமாகும். உள்ளத்தை தூய்மையாக வைக்க சிறந்த வழி தியானம். நாம் செய்யும் எந்த வேலையாக இருந் தாலும் அதனை இறைவனுக்கே சமர்ப்பிக்க வேண்டும்.

எனவே தியானம் செய்யும் போதும் இறைவனை மனதில் நினைத்து செய்தால் மன அமைதி கிடைப்பதுடன்இ இறைவனின் அருளும் கிடைக் கிறது. காலையில் 15 நிமிடமும் மாலையில் 15 நிமிடமும் தியானம் செய்வது போதுமானது.

காலையில் குளித்து முடித்த உடன் கடவுள் படத்தின் அருகில் அமர்ந்து கொள்ளுங்கள் எப்படி உட்கார்ந்தால் வசதியாக இருக்குமோ அப்படி அமர்ந்து கொள்ளவும். கண்களை மூடிக்கொண்டு உங்கள் பார்வையை அதாவது உங்கள் கவனத்தை இரண்டு கண்களுக்கு இடையில் உள்ள நெற்றிக்கண் என்னும் பகுதியில் கொண்டு செல்லவும். கடவுளை மனதில் நினையுங்கள்.

இலேசாக மூச்சை இழுத்து விட்டுக் கொண்டு இருக்கவும். ஆனால் மூச்சை முழுமையாக இழுத்து முழுமையாக வெளிவிடவும். மூச்சை சிரமத்துடன் இழுத்து விடக்கூடாது. தொடர்ந்து கண்களை மூடியவாறே அமர்ந்து இருக்கவும். உங்கள் கவனம் நெற்றிக் கண்ணில் இருக்க வேண்டும்.
உங்களை சுற்றிலும் ஏற்படும் சப்தங்களை கேட்டுக் கொண்டே இருங்கள். சில நாட்களுக்கு பிறகு இந்த சப்தங்கள் உங்களுக்குப் பழகி விடும். உங்களை சுற்றிலும் இருந்து வரும் சப்தங்களை பற்றி கவலைப்படாதீர்கள். பிறகு நாளடைவில் இந்த சப்தங்கள் உங்கள் காதுகளுக்குக் கேட்காது.
இவ்வாறு தினமும் அமர்ந்து கடவுளை மட்டுமே மனதில் நினையுங்கள்.வேறு எதைப்பற்றியும் சிந்திக்காமல் அமைதியாக இருங்கள். சுமார் 10 முதல் 20 நிமிடங்கள் வரை தியானம் செய்யலாம்.
இவ்வாறு தியானம் செய்து முடிந்தவுடன் மீண்டும் கடவுளை வணங்கி விட்டு எழுந்து உங்கள் அடுத்த வேலைகளை தொடர்ந்து தினமும் செய்து வந்தால் மனஅமைதியும்இ தெளிவும் கிடைக்கும். இவ்வாறு தியானம் செய்து முடிந்தவுடன் மீண்டும் கடவுளை வணங்கி விட்டு எழுந்து உங்கள் அடுத்த வேலைகளை கவனிக்கலாம். இவ்வாறு தொடர்ந்து தினமும் செய்து வந்தால் மனஅமைதியும்இ தெளிவும் கிடைக்கும். எமது தமிழ்ப் பாடசாலையில் பெற்றோர்களுக்கான இலவச யோகா வகுப்புக்கள் தமிழ்ப் பாடசாலை நேரத்தில் நடைபெறுகின்றன.



# KIDS PAGE
# சிறுவர் பகுதி



## மாதங்கள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ை | த | ங | ற | ந | சி | ஐ | வ | ல | ர | ை | ழி |
| அ | த | ஒ | ண | ஒ | ப | உ | எ | டி | ெ | அ | ங |
| ட | ழ | ை | ர | ல | ங் | வ | சி | ணி | ச | ந | ற |
| த | ம | ம | ா | சி | கு | ா | த | வ | ம | ட | க |
| ா | ப | க | த் | இ | னி | ப | க | அ | ண | ை | ள |
| ள | ண | தி | ட | அ | தி | ஆ | ஆ | னி | தி | ை | ய |
| ய | ை | தி | ம | ா | ெ | ந | உ | த் | ஒ | ங | ழி |
| ர | ர | வ | ட | எ | டி | ண | ர் | ஒ | ய | எ | க |
| வ | ல | ட் | க | ண | ங் | ா | ள | ப | ஆ | டி | ர் |
| ச | ர | ந | ற | ா | க | அ | ழ | க | ெ | டி | ா |
| பு | ர | இ | ட | ா | சி | ந | சி | ப | ப் | ஐ | ம |

தை
மாசி
பங்குனி
சித்திரை
வைகாசி
ஆனி

ஆடி
ஆவணி
புரட்டாசி
ஐப்பசி
கார்த்திகை
மார்கழி



# Happy New Year!

## From the Kids Side Writer!

There are four competitions in the Kids Side this Chaalaram. Please attempt to win them as you will get prizes. There is a word search, colouring picture, Draw a Picture and a quiz.

### Draw a Picture!

This Chaalaram's theme is Tamil. Attempt to draw a picture of something to do with London. There are a few ideas to give you help. Please do not feel restricted.

- Thiruvalluvar
- Murugan
- Sri Lanka
- Thai Pongal

### Quiz!

Which continent is Sri Lanka in?

____________________

Which country is nearest to Sri Lanka?

____________________

When is Thai Pongal in 2014?

____________________

Who do we thank on Thai Pongal?

____________________

When is Maatu Pongal?

____________________

Complete all the competitions and be a winner of a fantastic prize. Send your kids page with your name, age, teacher's name to 64 Glencoe Avenue, Ilford, Essex, IG2 7AN